[1972 நவம்பர் 13

### *Boat building yards*

* 280 Q.—Thiru V. Isvarmurti: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the places where **boat building yards have been located in this State district-wise?**

### படகு கட்டும் தளங்கள்

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் படகு கட்டும் தளங்கள் மாவட்ட வாரியாக எங்கெங்கு அமைக்கப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இம்மாநிலத்தில் மீனளத் துறையின் பொறுப்பில் படகு கட்டும் தளங்கள் நான்கு உள்ளன. அவற்றில் இரண்டு சென்னை மாநகரில் இராயபுரத்திலும், ஒன்று தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினத்திலும், ஒன்று இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்திலும் உள்ளன. இவை தவிர, தனியாருக்குச் சொந்தமான படகு கட்டும் ஏழு தளங்கள் இம்மாநிலத்தில் உள்ளன.

### *Handloom Finance Corporation, Limited*

* 281 Q.—Thiru V. Isvarmurti: Will the Hon. the Minister for Industries be pleased to state the financial assistance, if any, given by the Handloom Finance Corporation Limited to—

1. Private Individuals;
2. Co-operatives; and
3. Firms, during 1969–70 and 1970–71?

### கைத்தறி நிதிக் கழகம்

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

கைத்தறி நிதிக் கழகம் 1969–70, 1970–71 ஆம் ஆண்டுகளில் (1) தனி நபர்கள் (2) கூட்டுறவுச் சங்கங்கள் (3) நிறுவனங்களுக்கு நிதியுதவி ஏதேனும் வழங்கியிருந்தால், அது குறித்த விவரம் யாது ?

1972 நவம்பர் 13]

மாண்புமிகு திரு செ. மாதவன் : 1. தனி நபர்களுக்கு.

| வருடம். | | நபர்களின் எண்ணிக்கை. | அளிக்கப்பட்ட தொகை. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1969 | .. | 1732 | 95·17 |
| 1970 | .. | 1760 | 92·51 |
| 1971 | .. | 1830 | 97·88 |

2. கூட்டுறவு சங்கங்களுக்கு—ஏதும் வழங்கவில்லை

3. தனிப்பட்ட நிறுவனங்களுக்கு.

| வருடம். | | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அளிக்கப்பட்ட தொகை. (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|---|
| 1969 | .. | 349 | 40·51 |
| 1970 | .. | 427 | 47·74 |
| 1971 | .. | 432 | 50·29 |

*Employment Exchanges*

* 282 Q.—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total number of unemployed in the Live Registers of the Employment Exchanges in the State during the years 1968 to 1971;

(*b*) whether the number is on the increase; and

(*c*) if so, the action proposed to be taken by the Government in this regard?

வேலை வாய்ப்பு அலுவலகங்கள்

திரு ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பதிவேடுகளில் 1968-ம் ஆண்டு முதல் 1971-ம் ஆண்டு வரை வேலை அளிக்கப்படாமலுள்ளோரின் மொத்த எண்ணிக்கை யாது ?

(இ) அந்த எண்ணிக்கையானது பெருகி வருகிறதா ?

(உ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?